**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | |
| Sessions | Case No.**S.C. 76 / 2017** |
| Deposition of Witness for | Prosecution அ.சா.3<br><br>Defense<br>Court |
| Name | ரெங்கராஜ் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026 | |

எதிரிகள் - ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்பொழுது லாலாபேட்டையில் குடியிருந்து சென்ரிங் வேலை செய்து வருகிறேன். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 10 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் மாலை 15.30 மணிக்கு வேலைக்கு போய்விட்டு சந்தைபேட்டை அருகே வந்தபொழுது லாலாபேட்டை போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் எழுதாத வெள்ளை காகிதத்தில் கையெழுத்து போட்டேன். மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தாகவும், போலீசார் விசாரணையில் கடந்த 17.01.2017ம் தேதி 15.30 மணிக்கு சந்தைபேட்டை அருகே சென்றுக்கொண்டிருந்தபொழுது லாலாபேட்டை போலீசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள் என்றும், மேற்படி பார்வை மகசரில் நானும், விஜய் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும், போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எனக்கே தெரிந்த காரணங்களுக்காக எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சந்தைபேட்டையில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.10 18:05:54 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.